பக்கங்கள்:-24

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆடி 07 | செவ்வாய்க்கிழமை | 23.07.2024 | அதிர்வு 357

## புரிந்துணர்வு உடன்பாட்டில் 9 அம்சங்கள் வலியுறுத்து!

(எஸ்.நிதர்ஷன்)

ஏழு தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள், தமிழ் மக்கள் பொதுச்சபை ஆகியவை தமிழ்த் தேசியப் பேரவையாக நேற்று செய்து கொண்ட புரிந்துணர்வு 06



# 22 ஐ உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்துவோம்!

## ரணிலின் தந்திரத்தை மக்கள் அறிவார்கள் - கம்மன்பில

“சர்வஜன வாக்கெடுப்பு இல்லாமல் உத்தேச 22ஆவது திருத்தத்தை எளிய பெரும்பான்மையுடன் நிறைவேற்றுவதற்கு அரசு முயற்சிக்கின்றது. 22ஆவது சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டவுடன் அதனைஉயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்துவோம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தந்திரத்தை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். ஆகவே, எதனையும் அலட்சியப்படுத்த முடியாது.”

- இவ்வாறு பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில எம்.பி. தெரிவித்தார். 07

## ஜனாதிபதித் தேர்தலைக் காண்காணிக்க வெளிநாட்டு அமைப்புக்களும் களத்தில்?




ஜனாதிபதித் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கையில் சர்வதேச தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களும் ஈடுபடவுள்ளன என்று தெரிய வருகின்றது.

இதற்கமைய சார்க் மற்றும் பொதுநலவாய தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் இலங்கை வரவுள்ளன. ஐரோப்பிய தேர்தல் கண்காணிப்பு அமைப்பு 07




ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரச நாடாளுமன்றக் குழுவினரை நேற்று மாலை சந்தித்துப் பேசியிருக்கின்றார். அந்தச்சந்திப்பு பழைய நாடாளுமன்றக் கட்டடத்தில் நடைபெற்றுள்ளது.

இந்தக் கூட்டத்தில் மஹிந்த ராஜபக்ஷவும் பங்குபற்றினார். தம்மை ஜனாதிபதியாக்கி, நாட்டை வழிநடத்தும் பொறுப்பை தன்னிடம் ஒப்படைத்து, முழு ஒத்துழைப்பு நல்கியமைக்காக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நன்றி கூறி உரையாற்றினார் என அறிய 06







# வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்களை சுற்றுலா வர்த்தகத்தில் இணைய ஜனாதிபதி அழைப்பு

“மத்திய கிழக்கு நாடுகள் உட்பட இலங்கைத் தொழிலாளர்கள் அனுப்பப்படும் நாடுகளின் சுற்றுலாப் பயணிகளை இந்நாட்டுக்கு வரவழைக்கும் புதிய வர்த்தக வாய்ப்புகள் குறித்து வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்கள் கவனம் செலுத்தினால், அவர்களுக்குத் தேவையான வசதிகளை சுற்றுலா அமைச்சின் ஊடாக வழங்க முடியும்.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

குருணாகல் எபிடோம் ஹோட்டல் வளாகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற “அபிமன் 2024“ நிகழ்வில் ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நாட்டின் பொருளாதாரத்திற்கு பாரிய பங்களிப்பை வழங்கும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிறுவனங்களைப் பாராட்டி சான்றிதழ்கள் மற்றும் நினைவுப் பரிசுகளை ஜனாதிபதி இதன்போது வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரையாற்றுகையில் –

“ஜனாதிபதியாக பதவியேற்று இரண்டாண்டு நிறைவடையும் இச்சந்தர்ப்பத்தில் நான் உங்களுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். அன்று நீங்கள் நாட்டுக்காக பணம் ஈட்டவில்லை என்றால், இன்று நாட்டை இந்த நிலைக்கு கொண்டு வர முடியாது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நாங்கள் ஒரு கடினமான சூழ்நிலையில் இருந்தோம்.

பொருளாதார நெருக்கடியிலிருந்து நாடு மீள முடியும் என்று யாரும் நம்பவில்லை. ஆனால் மக்களுடன் இணைந்து இந்த நாட்டை மீட்க முடியும் என்று நான் நம்பினேன். ஏனைய நாடுகளைப் போன்று அன்றி, இரண்டு ஆண்டுகள் நிறைவடைய முன்பே நாட்டை மீட்டெடுத்தோம்.

நாங்கள் கடினமான பயணத்தை கடந்து வந்துள்ளோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். நம் நாட்டிற்கு எதிர்காலம் இல்லை என்று பலர் நினைத்தனர். தொழிற்சாலைகளை நடத்த எரிபொருள் இல்லை. சுற்றுலா பயணிகள் யாரும் நாட்டுக்கு வரவில்லை. வெளிநாட்டுத் தொழிலாளர்கள் அனுப்பும் பணத்தில் நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றும் திட்டத்தை ஆரம்பித்தோம்.

எதிர்காலத்திற்கு முகங்கொடுக்க முடியும் என்ற நம்பிக்கை இப்போது எமக்கு உள்ளது. இதை எப்படி செய்தோம் என்று உலகின் பல நாடுகள் கேட்கின்றன. பங்களாதேசின் கடனை நாம் செலுத்திவிட்டோம். இன்று பங்களாதேசில் பதற்றமான சூழல் நிலவி வருகிறது. நாம் நெருக்கடிக்கு உள்ளான காலங்களில் எங்களுக்கு ஆதரவாக இருந்த அந்த நாட்டில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மை ஏற்பட வேண்டும் என நாம் பிரார்த்தனை செய்கிறோம்.

நாம் இப்போது எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்க வேண்டும். எமது நாட்டில் ஏற்றுமதி பொருளாதாரத்தை ஏற்படுத்த வேண்டும். மேலும், வெளிநாடு செல்லும் தொழிலாளர்களின் திறன்களை வளர்த்து, அவர்களுக்குத் தேவையான பயிற்சிகளை அளிக்க முறையான திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும். அப்போது அவர்கள் சிறந்த தொழில் வாய்ப்புகள் மூலம் அதிக வருமானம் பெறலாம்.

தொடர்ச்சி▼















# வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்களை சுற்றுலா வர்த்தகத்தில் இணைய ஜனாதிபதி அழைப்பு

தொடர்ச்சி▲

02 வருடங்கள் துன்பப்பட்டோம். இரண்டு வருடங்களாக உங்கள் ஆதரவுடன் இந்த நாட்டை முன்னெடுத்துச் சென்றேன். அதன் பலன்கள் உங்களுக்கு கிடைக்க வேண்டும். எனவே நாம் அனைவரும் இணைந்து புதிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். அதற்காக அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவோம். எமது பணியாளர்கள் அனுப்பப்படும் நாடுகளில் உள்ள வர்த்தக வாய்ப்புகளை உங்களால் இலங்கைக்கு கொண்டு வர முடியும் என நான் நம்புகிறேன். இன்று, அந்த வாய்ப்பு பெரும்பாலும் மத்திய கிழக்கு நாடுகளுக்கே செல்கின்றது.

இலங்கைத் தொழிலாளர்களை அந்த நாடுகளுக்கு அனுப்ப முடியுமானால், அந்த நாடுகளில் இருந்து சுற்றுலா பயணிகளை இலங்கைக்கு அழைத்து வர முடியும். நீங்கள் சுற்றுலா அமைச்சுடன் இணைந்து இதுகுறித்து நீங்கள் பணியாற்றலாம். அப்போது உங்கள் தொழில்துறை மேலும் விரிவடையும். அந்த நடவடிக்கைகளுக்கு நாங்கள் உங்களுக்கு அரசாங்கமாக ஆதரவை வழங்க முடியும்.

மேலும், அந்த நாடுகளுக்கு அவசியமான உணவு விநியோகத்தை மேற்கொள்ள முடிந்தால், அதற்கு அரச ஆதரவை வழங்க முடியும். நாம் புதிதாக சிந்தித்து புதிய பயணத்தை மேற்கொள்ள வேண்டும். ஒரே இடத்தில் தங்கி நிற்க முடியாது. மேலும், நாட்டின் எதிர்கால நிகழ்ச்சி நிரலை தயாரிப்பது அரசியல்வாதிகள் அல்ல என்பதை நினைவுகூர்ந்து, உங்களின் எதிர்கால பணிகளுக்கு எனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.” – என்றார்.











# வரலாற்றுச் சிறப்புமிக்க கதிர்காமம் புனிதஸ்தலத்தில் சமய நிகழ்வில் சாகல ரத்நாயக்க கலந்து கொண்டார்

வரலாற்றுச் சிறப்பு மிக்க கதிர்காமம் ஆலய வருடாந்த மகோற்சவத்தின் இறுதிநாள் எசல மஹா பெரஹரா நேற்று முன்தினம் வீதி உலா வந்தது.

ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியும், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான சாகல ரத்நாயக்க நேற்று முன்தினம் பிற்பகல் கதிர்காமம் ஆலயத்திற்குச் சென்று சமய வழிபாடுகளில் ஈடுபட்டு ஆசீர் வாதங்களைப் பெற்றுக்கொண்டார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க கதிர்காம விகாரைக்குச் சென்ற சாகல ரத்நாயக்க முதலில் கிரிவெஹர விகாரை பீடாதி பதி வண. கொபவக்க தம்மிந்த நாயக்க தேரைச் சந்தித்து ஆசிகளைப் பெற்றுக்கொண்டார்.

பின்னர் விகாரையில் நடைபெற்ற சமய நிகழ்வுகளில் கலந்து கொண்டு கதிர்காமம் சமன் மகா தேவாலயம் உள்ளிட்ட தேவாலயங்களுக்குச் சென்று ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டார்.

கதிர்காம ஆலயத்தின் வருடாந்த எசல மஹா பெரஹரா உற்சவத்தின் இறுதி நாளான நேற்று முன்தினம் கிரிவெஹர விகாரையின் விகாராதிபதி கொபவக தம்மிந்த தேரரின் அனுசாசனைக்கு அமைய சிங்கராஜா ஹஸ்திராஜா யானையின் மீது புனித கலசம், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் சாகல ரத்நாயக்க ஆகியோரின் தலைமையில் வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கதிர்காமம் உற்சவத்திற்காக வந்திருந்த பக்தர்களுடனும் சாகல ரத்நாயக்க சிநேகபூர்வ உரையாடலில் ஈடுபட்டார் . இராஜாங்க அமைச்சர் ஷீந்திர ராஜபக்ஷ, கதிர்காமம் மஹா தேவாலய பஸ்நாயக்க நிலமே டிஷான் குணசேகர மற்றும் பலர் கலந்துகொண்டனர்.











# சிரமங்கள் இருந்த போதிலும் 16,000 ஆசிரியர்களை நியமித்து ஆசிரியர் பற்றாக்குறை தீர்க்கப்பட்டுள்ளது

## கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு



"பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலும் தேசிய மற்றும் மாகாண மட்டத்தில் 16,000 ஆசிரியர் நியமனங்களை வழங்கி ஆசிரியர் பற்றாக்குறைக்கு அரசாங்கம் தீர்வை வழங்கியுள்ளது."

– இவ்வாறு கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில,

"கொவிட் தொற்று மற்றும் நாட்டில் ஏற்பட்ட போராட்டத்துடன், இந்த நாட்டில் உள்ள ஏனைய எல்லா துறைகளைப் போலவே, கல்வித் துறையும் பாரிய நெருக்கடியை சந்தித்தது. வீழ்ந்த நாட்டை மீட்கும் பொறுப்பை வேறு யாரும் பொறுப்பேற்காத நிலையில், ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான எமது அரசாங்கம் அந்த பொறுப்பை ஏற்றுக் கொண்டது.

அப்போது காணப்பட்ட நிலைமையை மாற்றி இரண்டு வருடங்களுக்குள் நாட்டை இயல்பு நிலைக்கு கொண்டு வர அரசாங்கம் செயற்பட்டது. எனவே, இந்த நேரத்தில், நாட்டின் அன்றைய நிலையையும், இன்றைய நிலையையும் நினைவு கூர வேண்டிய தேவை உள்ளது.

அத்துடன், இலங்கையில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு 2025ஆம் ஆண்டுக்கான பாடசாலை சீருடைகளை 100 வீதம் வழங்குவதாக சீன அரசாங்கம் அமைச்சுக்கு உறுதிப்படுத்தியுள்ளது.

2025 ஆம் ஆண்டுக்கான பாடசாலை பாடப் புத்தகங்களை பிரதேச களஞ்சியங்களுக்கு விநியோகிக்கும் பணிகள் நாளை முதல் ஆரம்பிக்கப்படும்.

பிரதான மற்றும் தேசிய பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய அனைத்து பாடசாலைகளுக்கும் மதிய உணவு வழங்க ஏற்பாடு செய்துள்ளோம். இதன் மூலம் 17 லட்சம் மாணவர்கள் பயன்பெறுகின்றனர்.

பல்கலைக்கழகங்களில் வெளிநாட்டு உதவியின் கீழ் ஆரம்பிக்கப்பட்டு கடந்த காலத்தில் நிறுத்தப்பட்ட அபிவிருத்தி பணிகளும் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இது பல்கலைக்கழக கட்டமைப்புக்கும் நிர்மாணத் துறைக்கும் மிகவும் முக்கியமானது என்பதைக் கூற வேண்டும்.

மேலும், கல்வித்துறையில் ஆசிரியர் தொழில்சார் பிரச்சினைகள் தொடர்பான இரண்டு பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்க நாங்கள் செயற்பட்டு வருகிறோம். அதன் கீழ், ஆசிரியர்களின் தொழில் சார்ந்த பிரச்சினைகள் குறித்து ஆய்வு செய்து, தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்பட்டும். அதன் மூலம் சம்பள உயர்வை தாமதமின்றி வழங்க முடியும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் ஏற்றுக் கொள்ளப்பட்டதன் பிரகாரம், எதிர்வரும் புதன்கிழமைக்குள், உரிய உத்தரவுக் கடிதங்கள் அமைச்சுக்கு கிடைத்த பின்னர், மாகாண அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்க ஏற்பாடு செய்யப்படும்.

அத்துடன், இந்தக் காலப்பகுதியில் தேசிய மற்றும் மாகாண மட்டத்தில் சுமார் 16,000 ஆசிரியர் நியமனங்களை வழங்க ஏற்பாடு செய்தோம். பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ள நிலையில் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதன்படி, ஆசிரியர் பற்றாக்குறைக்குத் தீர்வுகளை வழங்குவதில் வெற்றி பெற்றுள்ளோம். மேலும், 2700 ஸ்மார்ட் போர்ட்டுகளை, பாடசாலைகளுக்கு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, முழுமையான பாடசாலை வலயமைப்பையும் டிஜிட்டல் மயமாக்குவதே எமது திட்டமாகும். மேலும், ஆசிய அபிவிருத்தி வங்கி ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்க 400 மில்லியன் டொலர்களை வழங்க திட்டமிட்டுள்ளது." – என்றார்.

# புஞ்சிக்குளம் விபத்தில் இருவர் படுகாயம்!





(அஸ்ஹர் இப்றாஹிம்)

ஏ – 9 வீதியில் திறப்பனை, புஞ்சிக்குளம் பகுதியில் பயணித்த வான் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி மரமொன்றில் மோதி நேற்று மாலை விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன்போது பின் ஆசனத்தில் பயணித்த இருவர் படுகாயமுற்ற நிலையில் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று திறப்பனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் இருந்து கிளிநொச்சி நோக்கி ஏ – 9 வீதியூடாகப் பயணித்த வானே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்து தொடர்பில் திறப்பனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வந்தது.

உடனடியாக ஜனாதிபதி தேர்தல்தான் நடக்கும், நாடாளுமன்றத் தேர்தலுக்கு அழைப்பு விடுக்கும் எண்ணமேதும் இல்லை என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தக் கூட்டத்தில் கோடி காட்டினார் என்றும் தெரிகின்றது.

ஜனாதிபதித் தேர்தலை நடத்தி முடிப் பதற்கு 20 பில்லியன் ரூபா தேவைப் படும் எனச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதை எப்படியும் தேடி ஒதுக்குவோம் என்றும் குறிப்பிட்டார்.

தான் இந்த ஜனாதிபதி தேர்தலில் களம் இறங்குகின்றமை குறித்து ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்கவும் இந்தக் கூட்டத்தில் வாய் திறக்கவில்லை. அவரை ஆதரிப்பது குறித்தோ அல்லது பிறிதொரு வேட்பாளரை மொட்டுக்கட்சி சார்பில் நிறுத் துவது பற்றியோ பொதுஜன பெரமுனவி னரும் எதுவும் கூறவில்லை என்றும் தெரிகின்றது.

அந்த விடயத்தில் ஓர் அசாத்தியமான மௌனம் நேற்றைய கூட்டத்தில் பேணப் பட்டதாகக் கூட்டத்துடன் தொடர்புடைய ஒருவர் தெரிவித்தார்.

\+ + +

அமெரிக்க ஜனநாயகக் கட்சியின் சார்பில் அதிபர் தேர்தலில் போட்டியிட இருந்த ஜனாதிபதி ஜோ பைடன் கடைசி நேரத்தில் போட்டியிலிருந்து விலகியுள் ளார். அவரது முதுமை நிலை கருதி இந் தப் பொறுப்பில் இருந்து அவர் விலக வேண்டும் என்று கட்சிக்காரர்களும் அவரது குடும்பத்தினரும் கொடுத்த அழுத்தமே இப்படி ஒரு முடிவை எடுக்க அவரைத் தள்ளின என்பது இப்போது வெளிப்படையான விடயம்.

இதை அறிந்து கொண்டு தமிழரசுக் கட்சியின் ஒரு முக்கிய ஆதரவாளர் ஒருவர் நேற்று மாலை எனக்கு அழைப்பு எடுத்தார்.

ஜனநாயக கட்சி பிரமுகர்களின் – அது வும் பைடனின் குடும்ப உறுப்பினர்க ளின் – நியாயமான செயற்பாட்டை ஈண்டு குறிப்பிட்டுப் பாராட்டிய அவர், இது தமிழ ரசு கட்சியில் நடக்காதமையால்தான் பல பிரச்சினைகள்,அசௌகரியங்கள் இங்கு உருவாகின என்றார்.

இதுவரையும் அது இங்கு நடக்க வில்லை, இனியும் நடக்குமோ தெரியாது என்றும் அவர் கூறினார்.

கட்சியே வயோதிப மடமாகிவிட்டால் மக்களும் தமிழரசுக் கட்சியையும் அரசிய லில் இருந்து மடத்துக்கு அனுப்பி விடுவர் என்று அவர் ஆதங்கப்பட்டு கொண்டார்.

அவர் கூறுவதில் ஆழமான அர்த் தம் இருப்பதாகவே எனக்குப் பட்டது. நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் வாசகர்களே...?

# புரிந்துணர்வு உடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உடன்பாட்டில் 9 அம்சங்கள் வலியுறுத் தப்பட்டுள்ளன.

அந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில், “ஈழத்தமிழ் மக்கள் இலங்கைத்தீவின் வடக்கு, கிழக்கில் தமக்கென ஒரு மரபு வழித் தாயகத்தைக் கொண்ட. வரலாற் றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து வடக்கு, கிழக்கு உள்ளடங்கலாக இலங்கைத் தீவில் வாழும் தேசிய இனம் என்ற அடிப் படையில், சுயநிர்ணய உரிமையைக் கொண்டவர்கள். அதனடிப்படையிலும் பன்னாட்டுச் சட்டங்களின் அடிப்படை யிலும் உச்சபட்ச தன்னாட்சியைக் கோரு வதற்கான உரித்துடையவர்கள்.

நீண்ட வரலாற்றையும் மிகச் செழிப் பான பண்பாட்டையும் கொண்ட தமிழ் மக்களின் தனித்துவமான தேசிய இருப்பை சிதைக்கும் நோக்கத்துடன், நிலப்பரப்பு ரீதியாகவும். பண்பாட்டு ரீதி யாகவும். மதரீதியாகவும் என பல்வேறு வழிகளில் இலங்கைத்தீவில் இனவழிப்பு நடவடிக்கைகள் சிறீலங்கா அரசினால் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தமிழ் மக்களின் நியாயமான உரி மைப் போராட்டம் தீவிரவாதமாகவும் பிரிவினைவாதமாகவும் பயங்கரவாத மாகவும் சித்தரிக்கப்பட்டுவருகின்றது.

ஈழத்தமிழர்கள் இலங்கைத் தீவில் ஒரு தேசிய இனமாக இருப்பதும், கேந்திர முக்கியத்துவம் மிக்க புவிசார் அமை விடத்தைவாழ்விடமாகக்கொண்டிருப்பதும் அவர்களது பிரதான அரசியல் பலமாகும் என்னும் யதார்த்தத்தின் பின்னணியில் தான் தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் போராட்டம் முதலில் பிராந்தியமயப்பட்டது பின்னர் அனைத்துலகமயப்பட்டது.

நடந்து முடிந்த உள்நாட்டுப் போரில் இனப்படுகொலை செய்யப்பட்ட மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் மக்களின் விவகாரத்தில் பன்னாட்டுச் சமூகம் காட்டி வந்திருக்கின்ற கரிசனை களை இலங்கை அரசு எந்தவிதத்திலும் பொருட்படுத்தவும் இல்லை ஆக்கபூர்வ மான நடவடிக்கை எதனையும் எடுத் திருக்கவுமில்லை.

அதேநேரத்தில், முள்ளிவாய்க்காலின் பின்னரான கடந்த பதினைந்து ஆண்டுக ளில், இலங்கைத் தீவின் தேசிய இனப் பிரச்சனைக்கு தீர்வு காணும் முகமாக தமிழ் மக்களிற்கு சமஉரிமையை வழங் கும் அரசியல் தீர்வு தொடர்பில் எந்த வொரு நகர்வுகளைக்கூட இதுவரை காலமும் முன்னெடுக்கவில்லை. இனப் படுகொலைக்கு எதிரான நீதியுமின்றி, அரசியல் தீர்வுமின்றி. ஒன்றுபட்ட அர சியல் தலைமைத்துவமும் இன்றி பார பட்சங்களும், அடக்குமுறைகளும், அச்சுறுத்தல்களும். ஆக்கிரமிப்புக்க ளும், அழிப்புகளும், பிரித்தாளும் தந்தி ரங்களும் அரங்கேற்றப்பட்டுக்கொண் டிருக்கும் ஒரு அரசியல், பொருளாதார, இராணுவச் சூழலில் தமிழ் மக்களின் தேசிய இருப்பு கேள்விக்குள்ளாகி நிற் கின்றது. இவ்வாறான வரலாற்று உண் மைகளின் அடிப்படையிலும், இதுகால வரையிலான அனுபவங்களின் அடிப் படையிலும், இலங்கையின் 2024 அரசுத் தலைவர் தேர்தலைத் தமிழ் மக்கள் தரப்பில் செயல்முனைப்புடன் எதிர் கொள்ளவேண்டிய அரசியல் தேவையும் அவசியமும் எழுந்திருக்கின்றது.

இந்த யதார்த்தத்தின் பின்னனணி யில், தமிழ்த் தேசத்தின் மக்களை ஒன்று படுத்துவது என்னும் பிரதான நோக் கத்தோடு, எதிர்வரும் சிறீலங்காவின் அரசுத்தலைவர் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது என்று. தமிழ் தேசியக் கட்சிகளும் தமிழ் மக்கள் பொதுச்சபையும் இணக்கம் கண் டுள்ளன. அத்துடன், இதனைச் செயல் முனைப்புடன் கையாளும் நோக்கில், பொதுக் கட்டமைப்பு ஒன்றை உருவாக் குவதற்கான புரிந்துணர்வு உடன்படிக் கையை மேற்கொள்வதென்றும் முடி வைக் கொண்டுள்ளன. இதன்பிரகாரம் இவ்வுடன்படிக்கையின் சம தரப்புக்கள் என்னும் வகையில், தமிழ்த் தேசிய கட்சிகள், தமிழ் மக்கள் பொதுச்சபை ஆகி யவை பின்வரும் அடிப்படையில் புரிந் துணர்வு ஒன்றினை ஏற்படுத்திக்கொள் கின்றன.

தமிழ்த் தேசியக் கட்சிகள், தமிழ் மக்கள் பொதுச் சபை ஆகியவை இவ்வு டன்படிக்கையில் சம தரப்பினர் என்னும் வகையில், இரு தரப்பினரின் இணைவில், உருவாக்கப்படும் இக்கட்டமைப்பு “தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பு” என அழைக் கப்படும்.

இந்த உடன்படிக்கையின் பிரகாரம் உருவாக்கப்படும் ”தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு” எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை. சிறிலங்காவின் அரசுத் தலை வரை தேர்வு செய்வதற்கான தேர்தல் என்ற அடிப்படையில் நிராகரித்து தமிழ் மக்களின் அபிலாசைகளை வெளிப்படுத் தும் தேர்தலாக கையாளும் வகையில் தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவதெ னத் தீர்மானித்துள்ளது.

தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப் பானது தமிழ்ப் பொது வேட்பாளரைத் தேர்ந்தெடுத்தல், தேர்தல் விஞ்ஞாபனத் தைத் தயாரித்தல், நிதி தொடர்பான விடயங்கள், பரப்புரைகளை முன்னெடுத் தல் போன்ற, அனைத்து அவசியமான செயற்பாடுகளையும் முன்னெடுப்பதற் கும் நிர்வகிப்பதற்குமான, துணைக் குழுக்களை தேவைக்கேற்ப உருவாக் கும் அதிகாரங்களை கொண்டிருக்கும்.

தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பால் பொதுவேட்பாளரை நிறுத்தும் நடவடிக் கைக்காக உருவாக்கப்படும் குறித்த துணைக் குழுக்கள் மற்றும் ஏனைய துணைக் கட்டமைப்புக்கள் அனைத்தி லும் தமிழ்த் தேசியக் கட்சிகள், தமிழ் மக்கள் பொதுச் சபை ஆகியவை சம தரப்பாகப் பங்குபற்றும்.

தமிழ்ப் பொதுவேட்பாளராக நிறுத் தப்படுபவரும் அவருக்கான தேர்தல் சின் னமும் தமிழ்ப் பொது நிலைப்பாட்டுக்கான ஒரு குறியீடாக மட்டுமே கருதப்படுதல் வேண்டும்.

தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப் பானது பொது வேட்பாளராகத் தெரிந் தெடுக்கப்படுபவருடனும், அவர் எந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் சார்பில் உத்தியோகபூர்வமாக நிறுத் தப்படுகின்றாரோ அந்த நபருடனும் அந்தக் கட்சியுடனும் அவசியமானதும் உகந்ததுமான, உடன்படிக்கையைத் தனித்தனியே. நிறைவேற்றிக்கொள்ள வேண்டும்.

தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள், தமிழ் மக்கள் பொதுச் சபை ஆகிய இரு தரப்பும். ஒரு பொதுக் கட்டமைப்பாக செயற்படுபவர்கள் என்னும் அடிப்படை யில் கூட்டுப் பொறுப்புடையவர்கள் என் பதில் இணக்கம் காணப்படுவதுடன், இதற்கான வழிகாட்டல் நெறிமுறை ஒன்றை உருவாக்கிக் கொள்வது என்றும் இணக்கம் காணப்படுகின்றது.

தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் உடன்பாடுள்ள ஏனைய கட்சிகள் தமிழ்ப் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை ஏற்றுக் கொண்டு, பொதுக் கட்டமைப்புடன் இணைந்து பயணிக்க முன்வரும் போது, அவர்களை உள்வாங்கிக் கொள்வ தென்றும் இணக்கம் காணப்படுகின்றது.

தமிழ்த் தேசிய இனத்தின் நீண்ட கால அரசியல் அபிலாஷைகளை நிறை வேற்றும் குறிக்கோளுடன் தொடர்ந்து செயற்படுவதென இருதரப்பும் மேலும் இணங்கிக் கொள்கின்றனர்.” – என்றுள்ளது.







# தனிநபரால் அரச காணி வழங்கப்படுவதற்கு எதிர்ப்பு

## வவுனியா மாவட்ட செயலகத்தில் திரண்ட மக்கள்

(கே.வசந்தன்)

வவுனியா – பன்றிகெய்தகுளம் பகுதியில் தனிநபர் ஒருவரால் அரச காணியை 16 குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுவதற்கு அந்தப் பகுதி சமூக அமைப்புக்கள் மற்றும் பொதுமக்கள் எதிர்ப்புத் தெரிவித்து மாவட்ட அரச அதிபரைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

நேற்று வவுனியா மாவட்ட செயலாளர் பீ.ஏ.சரத்சந்திர, வவுனியா பிரதேச செயலாளர் நா.கமலதாசன் ஆகியோருடன் வவுனியா – பன்றிக்கெய்தகுளம் மக்கள் மற்றும் பொது அமைப்பினர் கலந்துரையாடினர்.

இதன்போது அவர்கள், ”வவுனியா – பன்றிக்கெய்தகுளம் மற்றும் அதனையண்டிய பகுதிகளில் கூட பலர் காணியின்றி இருக்கும்போது வெளிமாவட்டத்தவர்கள் உள்ளடங்களாக புதிதாக 16 குடும்பங்களை எமது கிராமத்தில் குடியமர்த்த வெளிநாட்டில் இருந்து வந்து நிற்கும் தனிநபர் ஒருவர் முயற்சி செய்கின்றார்.

அரசால் வேறு நபர்களுக்கு வழங்கப்பட்ட காணியை முறையாக மாற்றீடு செய்யாது அரச காணியில் தனிநபர் தான் விரும்பிய குடும்பங்களைக் குடியமர்த்த முயல்கின்றார். இதனை ஏற்க முடியாது. எமது மாவட்டத்தில் பலர் காணியில்லாது இருக்கின்ற நிலையில் வெளிமாவட்டத்தில் இருந்து மக்களைக் குடியமர்த்த முயல்வது பிழையான செயற்பாடு.

அடுத்து, எமது வன்னி மாவட்டத்துக்கென 6 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் அனுமதி வழங்காது வேறு அரசியல்வாதிகள், வேறு மாவட்ட எம்.பிக்கள் எமது மாவட்டத்தில் குடியேற்றத்தை மேற்கொள்ள அனுமதி வழங்கியதாக குடியமர்த்தும் வெளிநாட்டு நபர் கூறுகின்றார். இதற்கு எமது மாவட்ட எம்.பிக்களே முடிவு காண வேண்டும். இதற்கு எமக்குத் தீர்வு வேண்டும்.” – என்று தெரிவித்தனர்.

“அரச சட்டதிட்டங்களுக்கு அமைவாக குறித்த காணி தனிநபரால் வழங்க முடியாது. அதற்கு அனுமதி வழங்கப் படமாட்டாது.” – என்று இதன்போது மாவட்ட அரச அதிபர் மற்றும் பிரதேச செயலாளர் உறுதியளித்தனர் என்று பொது மக்கள் தெரிவித்தனர்.

## 22 ஐ உயர்நீதிமன்றத்தில்...

கொழும்பில் உள்ள பிவிதுரு ஹெல உறுமய கட்சி காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

“அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறும் என்று நாட்டு மக்கள் எதிர்பார்த்துள்ள நிலையில் மக்களைக் குழப்பத்துக்குள் தள்ளும் வகையில் அரசமைப்பின் 22 ஆவது திருத்தம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அரசமைப்பின் 19 ஆவது திருத்தம் உருவாக்கப்படும்போது அதன் 83 (ஆ) உறுப்புரையைத் திருத்தம் செய்ய மறந்து விட்டோம். ஆகவே, மன்னித்து விடுங்கள் என்று குறிப்பிட்டுக் கொண்டு 22 ஆவது திருத்தத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கொண்டு வந்துள்ளார்.

22ஆவது திருத்தம் பற்றி ஜனாதிபதி குறிப்பிடுவது முற்றிலும் பொய்யானது. ஜனாதிபதியின் பதவிக் காலம் தொடர்பில் அரமைப்பின் 30 (2) உறுப்புரை திருத்தப்பட்டு 6 வருட பதவிக் காலம் 5 வருடங்களாகக் குறைக்கப்பட்டது. ஆகவே, 83(ஆ) உறுப்புரையில் 6 வருடங்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளதைத் திருத்தம் செய்தாலும், செய்யாவிடினும் எவ்வித பயனும் கிடைக்காது. அதனால் ஜனாதிபதித் தேர்தலுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது.இதனை உயர்நீதிமன்றம் பலமுறை உறுதிப்படுத்தியுள்ளது.

அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தில் 83 (ஆ) உறுப்புரையைத் திருத்தம் செய்ய முடியாமல் போனது என்று குறிப்பிடுவதை ஏற்க முடியாது. அந்த உறுப்புரையைத் திருத்தம் செய்ய நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் மக்கள் வாக்கெடுப்புக்கும் செல்ல வேண்டும் என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளதால் அவ்விடயம் குறித்து அவதானம் செலுத்தவில்லை. தேசிய கீதம், தேசியக் கொடி உட்பட நாட்டின் ஒருமைப்பாடு உள்ளிட்ட விடயங்களில் மாற்றம் ஏற்படுத்த வேண்டுமாயின் சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்ல வேண்டும்.

சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்லாமல் 22 ஆவது திருத்தத்தை எளிய பெரும்பான்மையுடன் நிறைவேற்ற அரசு முயற்சிக்கின்றது. மக்கள் வாக்கெடுப்புடன் 22 ஆவது திருத்தத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற தீர்ப்பைப் பெறுவதற்காக இந்தச் சட்டமூலத்தை உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்துவோம். அதேபோல் இந்தச் சட்டமூலத்துக்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைப்பதையும் இல்லாதொழிப்போம். மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற 150 உறுப்பினர்கள் வாக்களிக்க வேண்டும். அரசிடம் பெரும்பான்மை கிடையாது. நாட்டுப் பற்று உள்ளவர்கள் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.” – என்றார்.

## ஜனாதிபதித் தேர்தலைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வருமா என்பது பற்றி இன்னும் உறுதியான தகவல்கள் வெளியாகவில்லை.

அத்துடன், உள்நாட்டுத் தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளும் தற்போதிருந்தே தமது பணிகளை ஆரம்பித்துள்ளன. தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பின்னர் அவை முழு வீச்சுடன் களமிறங்கவுள்ளன.

அதேவேளை, ஜனாதிபதித் தேர்தலை நீதியாகவும், சுதந்திரமாகவும் நடத்துவதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழுவும் கண்காணிப்பாளர்களை நியமிக்கவுள்ளது.


Muhurtham
Jewels
PRESENTS
PRADEEP
kumar
BUY TICKETS ON
eventbrite
SCAN NOW
JULY
27
2024
LIVE IN
TORONTO
CANADA EVENT CENTER
EVENT BY
tamil one
SV MEDIA
RADIO PARTNER
FM
88.9 HD3 & 105.9
PRINTING PARTNER
INK DRIP
E PAPER PARTNER
முரசு
DESIGN BY
DESIGN WOLF.CA

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சிறுவரின் வறுமை நிலை

சிறுவயதில் ஏழ்மை நிலை மரணத்தை விடக் கொடியது என்பர்.

இளமையில் வறுமை கொடுமையிலும் கொடுமை என்றே வைக்கப்படும்.

*“கொடியது கேட்கின் நெடியவெவ் வேலோய்!*
*கொடிது கொடிது வறுமை கொடிது*
*அதனினும் கொடிது இளமையில் வறுமை”*

- என்கிறாள் ஔவைப் பிராட்டி.

இலங்கையில் காற்பங்கு - நான்கில் ஒரு - சிறுவரின் நிலை இத்தகைய கொடியதுதான் என்ற அதிர்ச்சித் தகவல் வெளியாகியிருக்கின்றது.

“வறுமையில் சிறுவர் என்பது சமூகத்தில் கவனத்திற் கொள்ளாத ஒரு விடயமாக மாறியுள்ளது.

சர்வதேச புள்ளிவிவரங்களின்படி, நமது நாட்டின் சிறுவர்களில் 25 வீதமானோர் குழந்தை வறுமையால் பாதிக்கப்பட்டுள்ளனர். புள்ளிவிவரங்களின்படி, 42 வீத சிறுவர்கள் பல் பரிமாண வறுமையால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதற்கு இடமளித்துப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.”

- என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்திருக்கின்றார்.

இவை சர்வதேச சனத்தொகை கணக்கெடுப்பு மற்றும் ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளன. குழந்தைகளின் வறுமையை ஒழிக்க உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையிலான ஒரு தேசிய வேலைத்திட்டம் கொண்டு வரப்பட வேண்டும். சிறுவர் வறுமையை ஒழிப்பதற்கான ஜனாதிபதி செயலணியொன்று ஸ்தாபிக்கப்பட்டு, 25 மாவட்டங்களிலும் பிரதேச செயலகத்தின் ஊடாக இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியிருக்கின்றார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத் திட்டத்தின் கீழ் கம்பஹா, தொம்பே, ரதாவான, மஹகமசேகர மகா வித்தியாலயத்திற்கு ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள் மற்றும் அகராதிகள் என்பனவற்றை வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்விடயங்களைத் தெரிவித்திருக்கின்றார்.

இலங்கையில் சுமார் இரண்டில் ஒரு சிறுவருக்கு ஏதாவது ஒரு வடிவிலான அவசர கால உதவி தேவையாக இருக்கின்றது. இரண்டு வருடங்கள் தடைப்பட்ட கற்றல் நடவடிக்கையினால் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ள 4.8 மில்லியன் சிறுவர்களின் கல்வியானது, இன்னும் சீரடையவில்லை. அது இன்னும் ஆபத்துக் கட்டத்திலிருந்து முற்றாக மீண்டுவிடவில்லை. சிறுவர்களின் பாடசாலை நடவடிக்கைகள் தற்போதுள்ள நெருக்கடியினால் பல்வேறு வழிகளில் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த நெருக்கடிக்கு முன்பதாக அவர்கள் உட்கொண்ட சூடான மற்றும் ஊட்டச்சத்து மிக்க உணவு அவர்களுக்கு கிடைப்பதில்லை. அவர்களுக்குத் தேவையான அடிப்படையான கற்றல் உபகரணங்கள் இல்லை. உயர்ந்து செல்லும் பொருளாதார அழுத்தம் காரணமாக சிறுவர்களுக்கு எதிரான துஷ்பிரயோகம், சுரண்டல் மற்றும் வன்முறைச் சம்பவங்களின் அதிகரிப்பு தொடர்பான அதிக அறிக்கைகளை காண்கின்றோம். இலங்கையில் ஏற்கனவே பத்தாயிரத்துக்கும் அதிகமான சிறுவர்கள் நிறுவனம் சார் கட்டமைப்பின் பராமரிப்பில் இருக்கின்றனர். இதற்கான பிரதான காரணம் வறுமையாகும். சிறுவர்கள் வளர்வதற்கான மிகப் பொருத்தமான இடமாக அவை இருப்பதில்லை.

ஏனெனில், அதில் குடும்ப உறவுக்கான சாத்தியம் இருப்பதில்லை. துரதிஷ்டவசமாக, தம்மால் பராமரிக்கவும், உணவளிக்கவும் முடியாத நிலையில் மேலும் பல குடும்பங்கள் தமது பிள்ளைகளை இந்த நிறுவனம்சார் கட்டமைப்புக்குள் சேர்ப்பதற்கு இந்த நெருக்கடி வழிவகுத்துள்ளது. - என்று யுனிசெவ்வின் அறிக்கை ஒன்று விவரிக்கின்றது.

நமது நாடு விரைந்து அவதானம் செலுத்த வேண்டிய மிக முக்கிய விடயமாக சிறுவர்களின் வறுமை நிலை நெருக்கடி மாறி வருகின்றது.

# இந்தியாவில் நிபா வைரஸ் பரவல் சுகாதார அவசரநிலை அறிவிப்பு






இந்தியாவின் கேரள மாநிலத்தில் 14 வயதான சிறுவன் ஒருவர் உயிரிழந்ததை அடுத்து அங்கு நிபா வைரஸ் பரவல் தொடர்பான அச்சம் அதிகரித்துள்ளது.

இந்த வைரஸ் தொடர்பில் இந்திய மத்திய சுகாதார அமைச்சு கேரள சுகாதார அமைச்சுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

நிபா வைரஸ் தொற்றுறுதியான நிலையில் உயிரிழந்த மேற்படி சிறுவன் பாண்டிக்காடு பகுதியைச் சேர்ந்தவர் எனவும் அந்த பகுதி மக்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் கேரள சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த நோய்த் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கக்கூடிய 60 பேரிடம் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அத்துடன் பாண்டிக்காடு மக்களை முகக்கவசம் அணியுமாறும் வெளியிடங்களுக்குச் செல்வதைத் தவிர்க்குமாறும் சுகாதார அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

இதனையடுத்து இந்தியாவின் கேரள மாநிலத்தில் சுகாதார அவசரநிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

நிபா வைரஸ் என்பது பன்றிகள் மற்றும் வௌவால் போன்றவற்றிலிருந்து பரவும் ஒரு வகை வைரஸாகும்.

இதனை பெருந்தொற்றாக மாற்றமடையக்கூடிய முன்னுரிமையளிக்கப்பட வேண்டிய நோய்க்கிருமியாக உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

## நிபா வைரஸ் பரவல் எதிரொலி:

# தமிழக - கேரள எல்லைப் பகுதியில் சுகாதாரத் துறையினர் தீவிர சோதனை






நிபா வைரஸ் பரவல் எதிரொலி காரணமாக தமிழக – கேரளா எல்லைப் பகுதியில் கோவை மாவட்ட சுகாதார துறையினர் தீவிர சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

கேரள மாநிலம், மலப்புரம் மாவட்டம் பாண்டிக்கோடு பகுதியைச் சேர்ந்த 9 ஆம் வகுப்பு படிக்கும் 14 வயது சிறுவன் நிபா வைரஸால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தார். கேரளாவில் மேலும் சிலருக்கும் நிபா வைரஸ் பாதிப்பு அறிகுறிகள் இருப்பது தெரியவந்துள்ளது. இந்நிலையில், தமிழக – கேரளா எல்லைப் பகுதிகளில் கண்காணிப்பை தீவிரப்படுத்த தமிழக சுகாதாரத் துறை உத்தரவிட்டுள்ளது.

கோவை மாவட்டத்தையொட்டியுள்ள தமிழக – கேரளா எல்லைப் பகுதிகளில் சுகாதாரத் துறையினர் நேற்று காலை முதல் கண்காணிப்பை தீவிரப்படுத்தி உள்ளனர்.

அதன்படி, வாளையார் சோதனை சாவடியில் மாவட்ட சுகாதாரத் துறை ஊழியர்கள் கவச உடை அணிந்து பஸ், கார் மற்றும் வான், மோட்டார்சைக்கிள் உட்பட வாகனங்களை நிறுத்தி சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

கேரளாவில் இருந்து வருபவர்களுக்கு காய்ச்சல், சளி உள்ளிட்ட பாதிப்புகள் ஏதேனும் இருக்கிறதா என ஆய்வு மேற்கொண்ட பின்னரே அனுமதிக்கப்படுகின்றனர்.

கேரளாவில் இருந்து கோவை மாவட்டத்துக்குள் வரும் அனைத்து வழித்தடங்களிலும் சுகாதாரத் துறையினர் சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர். காய்ச்சல், சளி உள்ளிட்ட பாதிப்புகளுடன் வருபவர்களை மருத்துவமனைக்கு அழைத்து செல்ல ஆம்புலன்ஸ் வாகனமும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

முன்னெச்சரிக்கை மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் குறித்த வழிகாட்டு நெறிமுறைகளை தமிழக பொது சுகாதாரத்துறை வெளியிட்டுள்ளது.

அதில், காய்ச்சல், தலைவலி, மயக்கம், சுவாசப் பிரச்சினை, மனநலப் பிரச்சினை போன்றவை நிபா வைரஸின் முக்கிய அறிகுறிகளாகும்.

அறிகுறிகள் உள்ளவர்கள் மற்றும் அவரது தொடர்பில் இருப்பவர்களை 21 நாள்கள் தனிமைப்படுத்த வேண்டும். அறிகுறிகள் கண்டறியப்பட்ட நோயாளிகள் உடனடியாக பரிசோதனை செய்ய வேண்டும். காய்கள் மற்றும் பழங்களை நன்றாக கழுவி பயன் படுத்த வேண்டும்.

கிணறுகள், குகைப்பகுதிகள், தோட்டங்கள், இருள் சூழ்ந்த பகுதிகளுக்கு செல்வதை பொதுமக்கள் தவிர்க்க வேண்டும். நோயாளிகளை பரிசோதனை செய்யும் சுகாதாரத் துறை அலுவலர்கள் உரிய பாதுகாப்பு உபகரணங்களை அணிந்து கொள்ள வேண்டும். ரத்தம், தொண்டை சளி மற்றும் சிறுநீர் மாதிரிகளை பரிசோதனை செய்ய வேண்டும். நோயாளிகளிடம் இருந்து எடுக்கப்படும் மாதிரிகளை 2 முதல் 8 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில் பாதுகாத்து 48 மணி நேரத்துக்குள் ஆய்வகத்துக்கு அனுப்ப வேண்டும். பரிசோதனையின் முடிவுகளை சுகாதாரத்துறைக்கு உடனுக்குடன் தெரிவிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்காவின் ஜனாதிபதி வேட்பாளராக பிரசாரத்தை ஆரம்பித்தார் கமலா ஹரிஸ்!



ஜனநாயகக் கட்சியை ஓரணியாகத் திரட்டி அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் டொனால்ட் டிரம்பை தோற்கடித்து, வீழ்த்திக் காட்டுவோம் என அமெரிக்கத் துணை ஜனாதிபதி கமலா ஹரிஸ் சூளுரைத்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிட்ட ஜோ பைடன் விலகியதுடன், கமலா ஹரிஸை முன்னிறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து , ஜனாதிபதி வேட்பாளராக கமலா ஹரிஸ் தனது பிரசாரத்தைத் தொடங்கியுள்ளார்.

பிரசாரத்தின்போது, நீதிமன்றத்தால் குற்றவாளி எனத் தண்டிக்கப்பட்டது டொனால்ட் ட்ரம்ப்பா ? வழக்கறிஞர் கமலா ஹரிஸா ? என கோசங்கள் எழுப்பப்பட்டுள்ளன.

மேலும் பெண்களின் கருத்தடை உரிமை, ஜனநாயகத்தை ட்ரம்பிடமிருந்து காப்பது உள்ளிட்டவற்றை முன்னிலைப் படுத்தி பிரசாரம் செய்ய கமலா திட்டமிட்டுள்ளார்.

இதற்கிடையே, பைடனின் பிரசார செயலகம், கமலா பிரசார செயலகம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள் ளது.

# இஸ்ரேலிய பிரதமர் அமெரிக்கா விஜயம்



இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அமெரிக்காவுக்கு விஜயமொன்றை மேற்கொள்ள உள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

பிரதமர் நெதன்யாகு வொஷிங்டனில் நாளை அமெரிக்கக் காங்கிரஸின் கூட்டு அமர்வில் உரையாற்றுவார் எனவும், ஜனாதிபதி ஜோ பைடனை சந்தித்துக் கலந்துரையாடுவார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தநிலையில், காசா மீதான இஸ்ரேலின் தாக்குதலை எதிர்க்கும் செயற்பாட்டாளர்கள் அமெரிக்கத் தலைநகர் வொஷிங்டனில் அன்றையதினம் ஆர்ப்பாட்டங்களை நடத்தத் திட்டமிட்டுள்ளனர்.

பெருமளவானோர் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுவதால் பாதுகாப்பைப் பலப்படுத்தி வருவதாக அந்த நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# தாய்வானின் வான்பரப்பிற்குள் சீனாவின் 12 இராணுவ விமானங்கள் அத்துமீறின



தாய்வானின் வான்பரப்பிற்குள் சீனாவின் 12 இராணுவ விமானங்கள் அத்துமீறிப் பிரவேசித்தன என தெரிவிக்கப் படுகின்றது.

மேற்படி சீன விமானங்கள் மற்றும் உத்தியோகபூர்வ கப்பல் நேற்று காலை 6 மணியளவில் தென் மேற்கு மற்றும் தென் கிழக்கு வான் பாதுகாப்பு அடையாள பிராந்தியத் திற்குள் பிரவேசித்தன என தாய்வான் தேசிய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் எக்ஸ் தளத்தில் தாய்வான் தேசிய பாதுகாப்பு அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில்,

“கடந்த வாரம் சீனாவின் நான்கு கரையோர காவல் படைக் கப்பல்கள் தாய்வானின் கட்டுப்பாட்டிலுள்ள கின் மென் கவுண்டி பகுதியில் பிரவேசித்தது.

இது ஜூலை மாதத்தில் இடம்பெற்ற முதலாவது அத்து மீறலாகும்.

தற்போது 16 சீன இராணுவ விமானங்கள் தாய்வா னுக்கு அருகில் அவதானிக்கப்பட்ட போதிலும் அவற் றில் 14 விமானங்கள் எமது வான் பரப்புக்குள் பிரவேசித் தன.

அத்தோடு 09 சீன கடற்படைக் கப்பல்களும் தாய்வான் எல்லைக்கு அருகில் காணப்பட்டன.” என்று குறிப் பிடப்பட்டுள்ளது.



# விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் வட்டியில்லா கடன் வழங்கும் செயல்முறை

## புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது

விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக விவசாய தொழில் முயற்சியாளர்கள் மற்றும் விவசாயிகளுக்கு வட்டியில்லாக் கடன்களை வழங்கும் செயல்முறை தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் கையெழுத்திடப்பட்டது.

முதல் கட்டத்தில், இந்த வேலைத்திட்டத்திற்கு பங்களிப்பை வழங்கும் இலங்கை வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி ஆகியவற்றுடன், விவசாய, பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் செயலாளர் ஜானக தர்மகீர்த்தி இந்த புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டார். இதன்படி எதிர்காலத்தில் மக்கள் வங்கியுடனும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட உள்ளது.

விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தின் முதற் கட்டமாக முன்னோடித் திட்டங்களை நடைமுறைப்படுத்த தெரிவு செய்யப்பட்ட 26 பிரதேச செயலகங்களில் விவசாய நவீனமயமாக்கல் நிலையங்கள் ஊடாக வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்த தலா 25 மில்லியன் ரூபா வீதம் 650 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இரண்டாம் கட்டமாக 10 மில்லியன் ரூபா பெறுமதியான விவசாய நவீனமயமாக்கல் திட்டங்களை நடைமுறைப்படுத்த 75 பிரதேச செயலகங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

பிரதேச செயலகங்களில் விவசாய நவீனமயமாக்கல் திட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது, இந்தத் வேலைத் திட்ட செலவில் 30 வீதத்திற்கும் அதிகமான பங்களிப்பை விவசாயத் தொழில்முயற்சியாளர்கள் மற்றும் விவசாயிகள் வழங்குவதுடன், மீதமுள்ள 70 வீதம் அரசாங்கத்தின் பங்களிப்பாகவும் உள்ளது.

சுழற்சி முறைக் கடன் திட்டமாக செயல்படுத்தும் வகையில், அரசு வழங்கிய பங்களிப்பை விவசாய நவீனமயமாக்கல் கடன் திட்டத்தின் கீழ் வட்டியில்லாக் கடனாக, இலங்கை, மக்கள் வங்கி மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கி ஆகிய மூன்று அரச வங்கிகளில் இருந்து பயனாளிகள் தேர்ந்தெடுக்கும் வங்கி மூலம் திரும்பப் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில், பொறிமுறைமையொன்றைத் தயாரித்து நடைமுறைப்படுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்திற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது.

அதன்படி, இலங்கை வங்கியின் தலைமையகத்தில் விவசாயம் மற்றும் பெருந்தோட்ட அமைச்சின் செயலாளரின் பெயரில் உள்ள கணக்கில் வைப்பு செய்யப்பட்ட நிதியத்தில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களுக்கு, இலங்கை வங்கி, மக்கள் வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி ஆகிய மூன்று வங்கிகளில் பயனாளி தேர்ந்தெடுத்த வங்கியின் மூலம் விவசாய தொழில் முயற்சியாளர்களுக்கு வட்டியில்லாக் கடனாக இந்தப் பணம் வழங்கப்படுகிறது.

கடன் சலுகைக் காலம் அதிகபட்சம் 06 மாதங்கள் ஆகும். மேலும் கடன் சலுகைக் காலம் உட்பட கடன் தொகையை திருப்பிச் செலுத்த வேண்டிய அதிகபட்ச காலம் 05 வருடங்கள் ஆகும். மேலும், விவசாயிகள் அல்லது விவசாய தொழில் முயற்சியாளர்கள் பெற்றுக்கொள்ளும் கடன் தொகை மற்றும் வேலைத் திட்டத்தின் தன்மை ஆகியவற்றின் அடிப்படையில், கடன் சலுகைக் காலம் மற்றும் கடனைத் திருப்பிச் செலுத்தும் காலம் ஆகியவை விவசாய நவீனமயமாக்கல் மையங்களால் தீர்மானிக்கப்படுகின்றன.

இந்த வட்டியில்லா கடன் திட்டம் தொடர்பில் கருத்து தெரிவித்த விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் செயலாளர் ஜானக தர்மகீர்த்தி,

“நாம் இப்போதேனும், உற்பத்தி சார்ந்த திட்டங்களுக்கு மாறுவது அவசியம். இந்த ஒப்பந்தத்தின் மூலம், உற்பத்தி திறன் கொண்ட தரப்பினரைக் கண்டறிந்து, அவர்களை ஊக்குவித்து, தேவையான வசதிகளை ஏற்படுத்தி, எதிர்காலத்தில் உற்பத்தியை அதிகரிக்கும் வேலைத்திட்டத்திற்கு மாறுவதற்கு முயற்சித்து வருகிறோம்.

இதுவரை மக்களுக்கு உதவிகளை வழங்கி, உற்பத்தியை அதிகரிக்கவும் முயற்சி செய்தோம். ஆனால் இதுவரை எங்களால் அந்த இலக்கை அடைய முடியவில்லை. உற்பத்தியை அதிகரித்தால் மாத்திரமே வெற்றி சாத்தியமாகும். விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் மூலம் பாரிய சாதனைகளை எட்டுவோம் என நம்புகிறோம். இந்த திட்டம் நீண்ட காலத்திற்குத் தேவையான இலக்குகளை அடைய மிகவும் முக்கியமானதாக இருக்கும். எனவே, ஒரு அமைச்சு என்ற ரீதியில் நாம் இந்த வேலைத்திட்டத்திற்கு எமது அதிகபட்ச பங்களிப்பை வழங்கி வருகின்றோம்.” – என்றார்.

பொருளாதார விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர். எச். எஸ். சமரதுங்க கருத்து தெரிவிக்கையில்,

“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் சமர்ப்பிக்கப்பட்ட இரண்டு வரவு செலவுத் திட்டங்களிலும் விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டம் குறிப்பிடப்பட்டுள்ளது. இன்று கைச்சாத்திடப்பட்டுள்ள ஒப்பந்தம் அதன் எதிர்காலத்திற்கான மிக முக்கியமான படியாகும்.

இதுவரை பயன்படுத்தப்படாத நிலத்தை தேசிய தொழில் முனைவோருக்கு வழங்குவதும், அந்த நிலங்களில் இருந்து ஒட்டுமொத்தமாக ஏற்றுமதி விவசாயத்தை உருவாக்குவதும், தேசிய தொழில்முனைவோர் மூலம் வர்த்தக விவசாயத்தை உருவாக்குவதும் இந்த நோக்கங்களில் ஒன்றாகும்.” – என்றார்.



# ‘அஸ்வெசும’ இரண்டாம் கட்டம் தொடர்பான கணக்கெடுப்பு ஜுலை 31 ஆம் திகதி நிறைவு

‘அஸ்வெசும’ நலன்புரி திட்டத்தின் இரண்டாம் கட்டம் தொடர்பான கணக்கெடுப்பை ஜுலை 31 ஆம் திகதிக்குள் நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், முதற்கட்டமாக இத்திட்டத்திற்கு விண்ணப்பிக்கத் தவறிய குடும்பங்களுக்கு, கடந்த பெப்ரவரி மாதம் விண்ணப்பங்கள் கோரப்பட்டு, சுமார் 454,924 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

அந்த விண்ணப்பங்கள் தொடர்பான கணக்கெடுப்பு பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நலன்புரி நன்மைகள் சபையின் தலைவர் ஜயந்த விஜேரத்ன தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நுவரெலியா மற்றும் பதுளை மாவட்டங்களில் இருந்து மாவட்ட மட்டத்தில் அதிகளவான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், கணக்கெடுப்புக்கான ஒவ்வொரு விண்ணப்பத்தின் தகவல் சேகரிப்பும் ஐறுஆளு மென்பொருளின் ஊடாக மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவிற்கும் கணக்கெடுப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும், அந்த அலுவலர்கள் அந்தந்த வீடுகளுக்குச் சென்று குடும்ப உறுப்பினர்களின் தகவல்களைக் கண்காணித்து, தொலைபேசி செயலி மூலம் சமூகப் பாதுகாப்புத் தகவல் பதிவேட்டில் பதிவுசெய்வர் எனவும் குறிப்பிட்டார்.

ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் கணக்கெடுப்பு நடவடிக்கையை கண்காணித்து மதிப்பீடு செய்வதற்கு கண்காணிப்பு அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார் என விஜேரத்ன தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில் –

“கணக்கெடுப்பு அலுவலரால் தகவல் கட்டமைக்கப்பட்ட பின்னர், அனைத்துப் பிரதேச செயலாளர்களும் கிராம உத்தியோகத்தர் பிரிவு ரீதியில் விண்ணப்பதாரர்களின் முழுமையான விவரங்களை கண்காணிக்க முடியும். கணக்கெடுப்பின் முடிவில், அந்தந்த குடும்பங்களின் தகவல்கள் தேர்வுக் குழுக்களால் கண்காணிக்கப்படுகின்றன.

தேர்வுக் குழுக்கள் கணக்கெடுத்த, குடும்பத்தின் தகவலைக் கண்காணித்து, தெரிவு அளவுகோல்களின் கணக்கீட்டை அங்கீகரிக்கும் பணிகள் முன்னெடுக்கப்படும்.

இவ்வாறு, தெரிவு அளவுகோல்கள் கணக்கிடப்பட்ட பின்னர், வறுமையைக் கணக்கிடுவதற்கு ஒரு மதிப்பெண் வழங்கப்படுகிறது. மேலும் இது கல்வி, சுகாதாரம், பொருளாதார நிலை, சொத்துகள், வீட்டு நிலைமை மற்றும் குடும்ப புள்ளி விவரங்கள் ஆகிய 06 பரிமாணங்களில் விஞ்ஞான ரீதியில் முன்னெடுக்கப்படுகிறது. பின்னர் தகுதியான விண்ணப்பதாரர்களின் பட்டியல் தயாரிக்கப்படும்.

மாற்றுத்திறனாளிகள், பாதிக்கப்படக்கூடியவர்கள், ஏழைகள் மற்றும் மிகவும் வறியவர்கள் ஆகிய 04 சமூகப் பிரிவுகளின் கீழ் ‘அஸ்வெசும’ நலன்புரி நலன்கள் வழங்கப்படுகின்றன. மேலும் ஊனமுற்றோர், முதியவர்கள் மற்றும் சிறுநீரக நோயாளிகளுக்கு வழமைபோல் வழங்கும் கொடுப்பனவுகளும் வழங்கப்படுகின்றன.

இந்த வேலைத் திட்டத்தின் முதல் கட்டத்திற்கு சுமார் 34 இலட்சம் விண்ணப்பங்கள் பெறப்பட்டன. அதில் 1,854,000 பேர் பயன்பெற தகுதி பெற்றுள்ளனர். அதற்காக அரசாங்கம் வழங்கிய தொகை 58.5 பில்லியன் ரூபா.

மேலும், ‘அஸ்வெசும’ நலன்புரித் திட்டத்தின் களத் தகவல் சேகரிப்பை திறம்படச் செய்ய புகைப்படங்கள், புவி வரைபடங்கள், குரல் பதிவு போன்ற வசதிகளுடன் கூடிய புதிய தொலைபேசி செயலி நலன்புரி நன்மைகள் சபை அறிமுகப்படுத்தியுள்ளது.” – என்றார்.

இந்த நலன்களுக்கு விண்ணப்பிக்கும் போது எப்போதும் மிகச்சரியான தகவல்களை வழங்குமாறும் நலன்புரி நன்மைகள் சபையின் தலைவர் ஜயந்த விஜேரத்ன கேட்டுக் கொண்டார்.

நலன்புரி நன்மைகள் சபையின் பணிப்பாளர்களான கமல் பத்மசிறி, குமா துனுசிங்க மற்றும் பலர் இந்த சந்தர்ப்பத்தில் கலந்துகொண்டனர்.

# திருமலை வாகன விபத்தில் மூவர் காயம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)



திருகோணமலை, ஹொரவப்பொத்தானை பிரதான வீதி மஹதிவுல்வெவ குளத்துக்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் மூவர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

திருகோணமலையில் இருந்து வவுனியா நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த வானின் டயருக்குக் காற்றுப்போனதால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின்போது வவுனியா – பூவரசங்குளம் பகுதியைச் சேர்ந்த மூவர் காயமடைந்துள்ளனர் எனவும், வாகனத்தில் 9 பேர் பயணித்துள்ளனர் எனவும் தெரியவருகின்றது.



# மனோ கணேசன் எம்.பிக்கு நன்றி செந்தில் தொண்டமான் தெரிவிப்பு

(எஸ்.கீதபொன்கலன்)

தோட்ட தொழிலாளர்களின் சம்பள பிரச்சினைக்கு தீர்வு எட்டும் வரை அவர்களுக்கு இடைக்கால தொகையாக மாதந்தம் ஐயாயிரம் ரூபா வழங்க வேண்டும் என ஜனாதிபதியிடம் இ.தொ.கா. தலைவர் செந்தில் தொண்டமான் முன்வைத்த கோரிக்கையை வரவேற்கின்றார் எனத் தனியார் தொலைக் காட்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கருத்து தெரிவித்த தமிழ் முற்போக்குக் கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்.பிக்கு இ.தொ.கா. தலைவர் செந்தில் தொண்டமான் நன்றி தெரிவித்துள்ளார்.

மனோகணேசன், சம்பள பிரச்சினையில் அரசியல் ஆதாயம் தேடாமல் கருத்து தெரிவித்தமை வரவேற்கத்தக்கதும், பாராட்டுக்குரியதும் என இ.தொ.கா. தலைவர் செந்தில் தொண்டமான் அவரது முகப்புத்தகத்தில் பதிவிட்டுள்ளார்.



# சாய்ந்தமருதில் மாமனாரைக் கொலை செய்த மருமகன் உட்பட ஐந்து பேர் ஞாயிறன்று கைது

(பாறுக் ஷிஹான்)

தனது மாமனாரை தாக்கி கொலை செய்தார் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட பிரதான சந்தேக நபர் உட்பட ஐவர் தலைமறைவாகி இருந்த நிலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொலிவேரியன் கிராமம் பிரிவு-09 பகுதியில் உள்ள வீடு ஒன்றில் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவத்தில் தாக்குதலுக்கு உள்ளாகி 62 வயதுடைய மீராசாயிப் சின்னராசா என்பவர் மரணமடைந்திருந்தார்.

மரணமடைந்தவரின் சடலம் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் வைக்கப்பட்ட பின்னர் அம்பாறை பொது வைத்தியசாலைக்கு பிரேத பரிசேதனைக்காக எடுத்துச்செல்லப்பட்டு விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் இரவு கையளிக்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்கு கல்முனை நீதிமன்ற பதில் நீதிவான் அப்துல் ரசீட் முஹம்மது கலீல் சென்று விசாரணைகளை மேற்கொண்டார்.



இச்சம்பவத்தில் மாமனாரை தாக்கி படுகொலை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட பிரதான சந்தேக நபர் மட்டக்களப்பு மாவட்டம் வாழைச்சேனை பகுதியில் இருந்தும் ஏனைய நான்கு சந்தேக நபர்களும் சாய்ந்தமருது பகுதியில் இருந்தும் கைது செய்யப்பட்டிருந்தனர். தனது மாமாவுடன் தகராறு செய்து வந்த பிரதான சந்தேக நபரான மருமகன் போதைப்பொருளுக்கு அடிமையானவர் என்பதுடன் சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்திலும் இரு வேறு குற்றச்சாட்டிற்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கைதான 33 வயதான பிரதான சந்தேக நபர் உட்பட குறித்த கொலை சம்பவத்திற்கு உடந்தையாக செயற்பட்டனர் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட 20, 19, 19, 18 வயது மதிக்கத்தக்க ஏனைய சந்தேக நபர்களை சட்ட நடவடிக்கைக்காக கல்முனை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த சாய்ந்தமருது பொலிஸ் பொறுப்பதிகாரி சம்சுதீன் தலைமையிலான பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.




# மன்னார் பற்றிய வரலாற்று ஆய்வு நூல் தொகுதி டெவ்லிங் நிறுவனத்திடம் நேற்றுக் கையளிப்பு

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சிரேஷ்ட பிரஜைகளின் நலன் சார்ந்து செயற்பட்டு வரும் 'மெதோடிஸ் சர்ச் டெவ்லிங்' நிறுவனம் மன்னார் ஊடகவியலாளர் எஸ்.ஜெகன் எழுதி வெளியீடு செய்த 'மகாவம்ச விஜயனும் மன்னார் கட்டுக்கரை பிரதேசமும்' என்னும் வரலாற்று ஆய்வு நூலில் ஒரு தொகுதியைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சிரேஷ்ட பிரஜைகளின் வாசிப்புத் திறனை மேம்படுத்தும் வகையில் சிரேஷ்ட பிரஜைகளுக்கு வழங்குவதற்காக இந்த நூல் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் க.டெ.அரவிந்தராஜ் முன்னிலையில் நேற்றைய தினம் காலை 10.30 மணியளவில் மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தில் வைத்து டெவ்லிங் நிறுவனத்தின் மன்னார் மாவட்ட பணிப்பாளர் எஸ்.என்.நிமால் நூல் தொகுதியைப் பெற்றுக் கொண்டார்.

இந்த நிகழ்வில் இந்த வரலாற்று ஆய்வு நூலை வெளியீடு செய்த மன்னார் ரோட்டரி கழகத்தின் தலைவர் திருமலை ராசா தனேஸ், மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தின் சிரேஷ்ட பிரஜைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் ஜோன்சன் சந்திரிகா, மன்னார் ரோட்டரி கழக உறுப்பினரும் கிராம சேவையாளருமான சிறிஸ்கந்தராஜா மற்றும் டெவ்லிங் நிறுவனத்தின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

குறிப்பாக மன்னார் மாவட்டத்தின் வரலாறுகளை அடுத்த தலைமுறையினர் அறிந்து கொள்வதற்காக வரலாற்று ஆய்வு நூல்கள், கலை கலாச்சார பண்பாடுகள், ஆயுர்வேத வைத்திய முறைகள் போன்ற தமிழர்களின் பாரம்பரியங்கள் அழிந்து விடாமல் அவற்றை ஒவ்வொரு தலைமுறையினர் தெரிந்து கொள்ளவும் ஆவணப்படுத்தும் நோக்கில் டெவ்லிங் நிறுவனம் இவ்வாறான நூல்களை கொள்வனவு செய்து டெவ்லிங் நிறுவனத்தின் கீழ் இயங்கும் சிரேஷ்ட பிரஜைகள் சங்கங்களுக்கு வழங்கி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

















# வெளிநாட்டவர்களுக்கும் வேறு மாவட்டத்தவர்களுக்கும் விவசாயக் காணி; சொந்த மக்களுக்குக் காணி இல்லை

## மன்னாரில் காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு எதிராக பொதுமக்கள் போராட்டம்

(ஜோஸப் நயன்)

மன்னார் மாந்தை மேற்குப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட இலுப்பைக் கடவை மற்றும் அந்தோனியார்புரம் பகுதியை சேர்ந்த ஏழை விவசாயிகள் தங்களுக்கான காணி உரிமையை கோரி நேற்றைய தினம் திங்கட்கிழமை மன்னார் மாவட்ட செயலகத்திற்கு முன்பாக அடையாளக் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

மாந்தை மேற்கு பகுதியில் உள்ள சோழ மண்டலம் குளத்தின் கீழ் 30 வருடங்களுக்கு மேலாக அரசாங்க அனுமதியுடன் விவசாய செய்கையில் ஈட்பட்டிருந்த அந்தோனியார் புரத்தை சேர்ந்த மக்களுக்கு நபருக்கு தலா இரண்டு ஏக்கர் காணி வீதம் வழங்குவதாகவும் அதன் ஊடக வாழ்வாதாரச் செயற்பாடுகளை முன்னெடுக்க உதவுவதாகவும் அரசாங்கத்தினால் தெரிவிக்கப்பட்டிருந்தது

இவ்வாக்குறுதியை அடிப்படையாக கொண்டு மக்கள் எந்த ஒரு காணி ஆவணங்களும் இன்றி பலவருடங்களாக அப்பகுதியில் வாழ்வாதாரச் செயற்பாடுகளை முன்னெடுத்து வந்தனர்.

இவ்வாறான நிலையில் கடந்த சில வாரங்களுக்கு முன்பாக இந்தக் காணிகளை அந்தோனியார்புர மக்களுக்கு வழங்காது வெளிநாட்டை சேர்ந்த நபர் ஒருவர் உள்ளடங்கலாக மன்னார் மாவட்டத்தை சாராத – வவுனியா, கொழும்புப் பகுதிகளைச் சேர்ந்த செல்வந்தர்களுக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு, அந்த நபர்களால் காணிகளைப் பண்படுத்தும் செயற்பாடும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது

இந்த நிலையில் தங்களுக்கு சொந்தமான காணியை – தாங்கள் பூர்வீகமாகப் பயன்படுத்திய காணியை – தங்களுக்கு வழங்காது, வெளிநாட்டைச் சேர்ந்த நபர்களிடமும் பணம்படைத்தவர்களிடம் பணம் பெற்று கொண்டு காணி சீர்திருந்த ஆணைக்குழுவினர் வழங்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்து, பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் வி.எஸ் சிவகரன் தலைமையில் இந்தப் போராட்டம் இடம் பெற்றுள்ளது.

இந்தப் போராட்டத்தில் “இந்த நாட்டில் ஏழைகளுக்கு நீதியே இல்லையா?”, “அரச அதிகாரிகளே! காணி மாபியாக்களின் கூட்டாளிகளா?”, “அரச அதிகாரிகளே! துரோகத்திற்குத் துணைபோகாதீர்கள்!”, “தமிழ் அரசியல் வாதிகளே! ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கின்றீர்களா?” – போன்ற பல்வேறு வாசகங்களை ஏந்தியவாறு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தின் இறுதியில் பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை

தொடர்ச்சி▼









# வெளிநாட்டவர்களுக்கும் வேறு மாவட்டத்தவர்களுக்கும் விவசாயக் காணி;சொந்த மக்களுக்குக் காணி இல்லை














தொடர்ச்சி▲

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் கனகேஸ்வரனிடம் போராட்டகாரர்கள் கையளித்தனர். இவ்வாறான காணி தொடர்பான பிணக்குகளை நீண்ட நாள்கள் முடிவுறுத்தாமல் வைத்திருக்க முடியாது எனவும், மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் பலருக்கு காணி இல்லாத நிலையில் வேறு மாவட்டத்தையும் வெளிநாட்டையும் சேர்ந்தவர்களுக்கு காணி வழங்குவதை ஏற்க முடியாது எனவும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

மேலும் இன்றைய தினம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு இந்தக் காணி விடயம் தொடர்பில் மாவட்ட செயலகம் சார்பாக அறிக்கை ஒன்று சமர்பிக்க உள்ளார் எனவும், இந்தப் போராட்டம் தொடர்பிலான ஆவணங்களையும் அறிக்கையுடன் சமர்பித்து விரைவில் இந்தப் பிரச்சினை தொடர்பில் தீர்க்கமான ஒரு முடிவை பெற்று தருவார் எனவும் அரச அதிபர் தெரிவித்தார்.

இந்தப் போராட்டத்தில் மன்னார் பிரஜைகள் குழு தலைவர் அருட்தந்தை மார்கஸ், சிவில் சமூக செயற்பாட்டாளர் அருட்தந்தை ஜெயபாலன் குரூஸ், முன்னாள் நகரசபை உறுப்பினர் ரெட்ணசிங்கம் குமரேஸ் உட்பட பலர் கலந்து கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கான தங்கள் ஆதரவை வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நெடுவூர் திருவிழா தொடர்பில் முன்னேற்பாட்டுக் கலந்தாய்வு









நெடுந்தீவு மண்ணில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 04திகதி தொடக்கம் 10 வரை நடைபெறவுள்ள "மீண்டும் ஊருக்கு போவோம்" என்னும் தொனிப் பொருளில் நெடுவூர் திருவிழா நடைபெறவுள்ளது.

இத் திருவிழா முன்னேற்பாட்டு குழு கலந்துரையாடல் நேற்று வட மாகாண சபை கேட்போர் கூடத்தில் வடமாகாண பிரதம செயலாளர் இலட்சுமணன் இளங்கோவன் தலைமையில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் நெடுவூர் திருவிழாவிற்கு வருபவர்களுக்கான சுகாதாரம், குடிதண்ணீர், உணவு, பாதுகாப்பு, போக்குவரத்து, தங்குமிட வசதிகளை ஏற்பாடு செய்தல் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

மேற்படி நிகழ்விற்கு திணைக்களங்கள் சரியான முறையில் ஒத்துழைத்து பங்காற்ற வேண்டும் என வடமாகாண பிரதம செயலாளரால் பணிப்புரை விடுக்கப்பட்டது

இக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், ஆணையாளர்கள், துறைசார் திணைக்கள அதிகாரிகள் மற்றும் நெடுந்தீவு ஊரும் உறவும் அமைப்பின் பிரதிநிதிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.




# 2024 ஆம் ஆண்டுக்கு உரிய வாக்காளர் பட்டியல் வெளியீடு

2024 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியல் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டுள்ளது.

வாக்காளர் பட்டியல் உறுதிப்படுத்தப்பட்டு, தேர்தல்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தேவைக்கேற்ப வாக்காளர் பட்டியலை அச்சிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

இதனிடையே, இவ்வார இறுதிக்குள் ஜனாதிபதி தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்படும் என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி தேர்தலுக்கான திகதி ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் திகதி குறித்த உத்தியோகபூர்வ அறிவிப்பு இந்த வார இறுதிக்குள் வெளியிடப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு இடையிலான விசேட சந்திப்பு எதிர்வரும் புதன்கிழமை அல்லது வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் குறித்து இங்கு விசேட கவனம் செலுத்தப்படவுள்ளது.

ஜனாதிபதி தேர்தலை அறிவிப்பதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் கிடைத்து இன்றுடன் 5 நாள்கள் நிறைவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் அரசாங்கம் காலம் தாழ்த்துகின்றது!

## ஜோசப் ஸ்டாலின் குற்றச்சாட்டு

தமது கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் காலம் தாழ்த்தும் அரசாங்கத்தை வன்மையாகக் கண்டிப்பதாக ஆசிரியர் மற்றும் அதிபர் தொழிற்சங்கக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குச் சட்டப்படி தொழில் செய்யும் போராட்டத்தை முன்னெடுத்துள்ளதாக அதன் இணைப்பாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

சம்பளப் பிரச்சினை உள்ளிட்ட விடயங்களுக்கு உடனடியாகத் தீர்வு வழங்குமாறு அவர் கோரியுள்ளார்.

சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில், கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மற்றும் அரச சேவை ஆணைக்குழுவின் அதிகாரிகளுடன் கலந்துரையாடல் இணக்கப்பாடின்றி நிறைவடைந்தது.




இந்தநிலையில், நேற்று முதல் சட்டப்படி வேலைசெய்யும் தொழிற்சங்க நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஆசிரியர் மற்றும் அதிபர் தொழிற்சங்கக் கூட்டமைப்பின் இணைப்பாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.



# மாளிகைக்காட்டில் நேற்று மர ஆலையில் தீ விபத்து!

## கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த கல்முனை மாநகர சபை

(நூருல் ஹுதா உமர்)

அம்பாறை மாவட்ட காரைதீவு பிரதேச சபை நிர்வாக எல்லைக் குட்பட்ட மாளிகைக்காடு பிரதேசத்தில் உள்ள மர ஆலை ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில், மரம் அறுக்கும் ஆலை தீப்பற்றியதுடன் மரங்களில் சிலவும் எரிந்து சாம்பலாகி உள்ளன.

நேற்று மாலை இந்த மர ஆலையில் திடீரெனத் தீ பரவியது, பிரதேசவாசிகள் மற்றும் கல்முனை மாநகரசபையின் தீயணைப்பு வாகனங்கள் மற்றும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பின் உதவியுடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்த தீ விபத்து மின்கசிவு காரணமாக ஏற்பட்டிருக்கலாம் எனவும், இதன் போது உயிர் சேதம் ஏதும் ஏற்படவில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.



# ஜனாதிபதித் தேர்தல் பணிக்கு அஞ்சல் திணைக்களம் தயார்!

SRI LANKA POST

ශ්‍රී ලංකා තැපැල් දෙපාර්තමේන්තුව
இலங்கை அஞ்சல் திணைக்களம்
Department of Posts - Sri Lanka

ஜனாதிபதித் தேர்தல் திகதி தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியானதன் பின்னர், தேவையான நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என அஞ்சல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்ட பிரதி அஞ்சல்மா அதிபர் ராஜித கே. ரணசிங்க மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

“அரசமைப்பின் பிரகாரம், ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் இந்த வருடம் நடத்தப்பட வேண்டும்.

அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள காலவரையறையைக் கருத்தில் கொண்டு, எதிர்வரும் செப்டம்பர் 17ஆம் திகதிக்கும் ஒக்டோபர் 16ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் தேர்தல் நடைபெறும்.

தேர்தலை நடத்துவதற்கான உரிய திகதியைத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்ததன் பின்னர் அது தொடர்பான நடவடிக்கைகளை அஞ்சல் திணைக்களம் ஆரம்பிக்கும்.” – என்றார்.

# வவுனியா - ஈரப்பெரியகுளத்தில் விவசாய அமைப்புக்குக் கட்டடம்

## வடக்கு ஆளுநரால் நேற்றுத் திறந்து வைப்பு

















**(கே.வசந்தன்)**

வவுனியா, ஈரப்பெரியகுளம் பகுதியில் விவசாய அமைப்புக்கான கட்டடம் வடக்கு மாகாண ஆளுனர் பீ.எச்.எம். சாள்ஸினால் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

அந்தக் கட்டடம் வடமாகாண ஆளுநரால் உத்தியோக பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டு விவசாய சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இந்த நிகழ்வின் நினைவாக மரநடுகையும் இடம்பெற்றது.

அத்துடன், சிங்கப்பூர் பௌத்த சங்கத்தின் நிதி உதவியில் ஈரப்பெரிய குளம் விவசாயிகளுக்கு 2000 ஏக்கர் நிலப்பரப்பில் உழுந்து, பயறு, கௌப்பி ஆகிய தானிய செய்கை மேற்கொள்வதற்கான உதவித் திட்டம் வழங்குவதற்கான செயற்பாடுகளும் இதன்போது முன்னெடுக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் சிங்கப்பூர் பௌத்த சங்கத்தினர், மதத்தலைவர்கள், சுகாதார பரிசோதகர்கள், பாடசாலை மாணவர்கள், விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள், விவசாயிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# கிளப் வசந்த கொலைச் சம்பவம் தொடர்பில் நீதிவான் முன்னிலையில் இரகசிய வாக்குமூலம்




அத்துருகிரியவில் அண்மையில் இடம்பெற்ற கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய 8 சந்தேக நபர்களையும் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கவெல நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சந்தேக நபர்களில் ஒருவரான பச்சை குத்தும் நிலைய உரிமையாளர் சம்பவம் தொடர்பாக நீதிவான் முன்னிலையில் இரகசிய வாக்குமூலம் அளித்துள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் பாதுகாப்பில் சந்தேகநபர்கள் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

அத்துருகிரிய பகுதியில் கடந்த 8 ஆம் திகதி வர்த்தக நிலையமொன்றின் திறப்பு விழாவின்போது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் கிளப் வசந்த மற்றும் பாடகி கே. சுஜீவாவின் கணவர் ஆகியோர் பலியாகினர்.

இந்த சம்பவத்தில் பாடகி கே.சுஜீவா உள்ளிட்ட நால்வர் காயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தேசிய கண் வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் பதவி நீக்கப்படாவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கை

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவிப்பு




தேசிய கண் வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர், பதவியிலிருந்து நீக்கப்படாவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அவர் உடனடியாக பதவி நீக்கப்படாவிட்டால் இன்று காலை 8 மணி முதல் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படுமென அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

மேற்படி வைத்தியரின் ஏற்றுக்கொள்ள முடியாத செயற்பாடுகள் காரணமாக அவரைப் பதவி நீக்குமாறு கோருவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், தேசிய கண் வைத்தியசாலையின் செயற்பாடுகளைச் சுமுகமாக முன்கொண்டு செல்வதற்காக, பொருத்தமான ஒருவர் அங்குப் பணிப்பாளராக நியமிக்கப்பட வேண்டும் எனவும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

# ஒரு மில்லியனுக்கும் அதிக சுற்றுலாப் பயணிகள் வருகை

இந்த மாதத்தின் முதல் 3 வாரங்களில் 109, 393 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை வெளியிட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட தரவுகளுக்கமைய, இந்தியாவிலிருந்தே அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

அத்துடன், இந்த வருடத்தின் இது வரையான காலப்பகுதியில், 11 லட்சத்து 19 ஆயிரத்து 642 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

இந்தியா, ரஷ்யா, பிரித்தானியா, ஜேர்மன், சீனா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளிலிருந்து அதிகளவிலான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.



# மேன்முறையீட்டு நீதிமன்ற உத்தரவுப்படி ஞானசாரருக்கு மேல்நீதிமன்றம் பிணை!



பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரை மேன்முறையீட்டு நீதிமன்ற உத்தரவுக்கு அமைய பிணையில் விடுவிக்க கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

மத அவமதிப்பு குற்றத்துக்காக தமக்கு எதிராக 4 வருடச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதையடுத்து, பின்னர் அதற்கு எதிராக ஞானசார தேரர் மேன்முறையீட்டு நீதிமன்றில் மேன்முறையீடு செய்திருந்தார்.

மேன்முறையீட்டு மனு விசாரணை செய்யப்பட்டு இறுதித் தீர்மானம் அறிவிக்கப்படும் வரை தம்மைப் பிணையில் விடுவிக்குமாறு ஞானசார தேரர் விடுத்திருந்த பிணைக் கோரிக்கையை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய பட்டபெந்திகே அண்மையில் நிராகரித்திருந்தார்.

மேல் நீதிமன்றத்தின் உத்தரவையடுத்து, ஞானசார தேரர் சமர்ப்பித்த மீளாய்வு மனுவை விசாரித்த மேன்முறையீட்டு நீதிமன்றம், அவரைப் பிணையில் விடுவிக்குமாறு அண்மையில் உத்தரவிட்டது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய, அவரை பிணையில் விடுவிக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

# யாழ் இந்துவின் இரண்டு அணிகளுமே கூடைப்பந்தாட்ட இறுதிப் போட்டியில்



மாகாணமட்ட கூடைப்பந்தாட்டத்தில் யாழ் இந்துவின் இரு அணிகளும் இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றுள்ளன.

நடைபெற்றுவரும் வடக்கு மாகாணமட்ட கூடைப்பந்தாட்ட தொடரில் 20 வயதுப்பிரிவில் யாழ் இந்துக்கல்லூரி அரையிறுதியில் யாழ் மத்திய கல்லூரியை வெற்றி பெற்று இன்று இறுதிப் போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரியை எதிர்கொள்கிறது.

17 வயதுப்பிரிவு போட்டிகளில் யாழ் இந்துக் கல்லூரி அரையிறுதியில் மத்திய கல்லூரி அணியை வென்று இன்று இறுதிப் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்கொள்கிறது.

இறுதிப்போட்டி யாழ் இந்துக்கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் இன்று காலை 8 மணியளவில் ஆரம்பமாகும்.



# இன்றைய ராசி பலன்கள் - 23.07.2024

## மேஷம்

பொறுமையான அணுகுமுறை தேவை. திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். உறுதி யான அணுகுமுறை தேவை.

பணியிடச் சூழல் அவ்வளவு சிறப் பாக இருக்காது. பணியில் தாமதங்கள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளது. மகிழ்ச்சியை தக்க வைக்க உங்கள் துணையுடன் அனுசரித்து செல்ல வேண்டும்.

பயணத்தின் போது பண இழப்புகள் நேரலாம். எனவே கவனமாக இருக்க வேண்டும்.

கால் வலியால் அவதிப்பட நேரலாம். தியானம் அல்லது யோகா மேற்கொள்வது நல்லது.

## ரிஷபம்

இன்று உங்களுக்கு உற்சாகமான மகிழ்சிகரமான நாள். இன்றைய தினத்தை கொண்டாடி மகிழ்வீர்கள். இது உங்களுக்கு மிகுந்த திருப்தி அளிக்கும். உங்கள் விருப்பங்களை திருப்திகரமாக நிறைவேற்றும் நாள்.

பணியில் அதிக வாய்ப்புகள் காணப்படுகின்றன. நீங்கள் திருப்தியாக உணர்வீர்கள். இன்று கிடைக்கும் புதிய வாய்ப்புகள் உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும்.

உங்களின் கருத்துக்களை உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக பகிர்ந்துகொள்வீர்கள். இதனால் ஒரு வரையொருவர் நன்கு புரிந்துகொள்வீர்கள்.

நிதியைப் பொறுத்தவரை இன்று திருப்திகரமாக இருக்கும். இன்று நீங்கள் பணம் சேமிப்பீர்கள். உங்கள் சேமிக்கும் ஆற்றல் அதிகரிக்கும்.

## மிதுனம்

இன்றைய நாளை முன்கூட்டியே திட்டமிட்டு அதன்படி நடந்து கொள்ள வேண்டும். முக்கியமான முடிவுகளை இன்று எடுப்பதை தவிர்க்கவும். அதனால் சில பிரச்சினைகள் ஏற்படும். எனவே சிறிது கவனமுடன் இருக்க வேண்டும்.

இன்று சாதகமான பலன்களைப் பெற அதிக முயற்சிகள் எடுக்க வேண்டும். இன்று சிறப்பான நாளாக அமையாது. இன்று பணிச்சுமை காணப்படும்.

நீங்கள் பொறுமை இழந்து காணப்படுவீர்கள். இதனை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இன்று பொறுமையாக இருக்க வேண்டியது அவசியம்.

இன்று பணபுழக்கம் போதுமானதாக இருக்காது. தேவையற்ற செலவினங்கள் அதிகமாக இருக்கும்.

முதுகு மற்றும் மூட்டுக்களில் விறைப்பு காணப்படும். உடற்பயிற்சி மற்றும் தியானம் மேற்கொள்வது நல்லது.

## கடகம்

இன்று உங்களுக்கு சாதகமான நாள் அல்ல. பலன்கள் தாமதமாகக் கிடைக் கும். அதிகம் எதிர்பார்க்காதீர்கள். பிரார்த் தனையில் உங்களை ஈடுபடுத்திக் கொள்வது உங்களுக்கு ஆறுதலை அளிக்கும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். உங்கள் பணி களை சிறப்பாக திட்டமிடுங்கள்.

உங்கள் மனதில் காணப்படும் பதட்டத்தை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இதனை தவிர்த்தல் நலம். உங்களை அமைதியாக வைத்திருங்கள்.

உங்கள் மதிப்பு மிக்க உடைமைகளை பத்திரமாக வையுங்கள். இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. நீங்கள் பணத்தை இழக்க நேரலாம்.

தோல் சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்படலாம்.

## சிம்மம்

இன்று உங்களிடம் பாதுகாப் பின்மை உணர்வு காணப்படும். இன்று அவ்வளவு சிறப்பான நாளாக அமை யாது. உங்கள் வளர்ச்சி குறித்து கவலைப்படுவீர்கள். இன்று அதிர்ஷ்டம் குறைந்து காணப்படும்.

இன்று பணியில் உங்களிடம் பொறுமை காணப்படாது. இதனால் தவறுகள் நேரலாம். மனதை நிலைப்படுத்தி பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். நீங்கள் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்க வேண்டும்.

இன்று பண இழப்பு காணப்படுகின்றது. நீங்கள் கடன் வாங்க நேரலாம். சிறந்த முறையில் பணத்தை நிர்வகிக்க முயலுங்கள்.

தொண்டை எரிச்சல் மற்றும் தலைவலி ஏற்பட வாய்ப்பு உள்ளது. குளிர்ச்சியான நீரைப் பருக வேண்டாம்.

## கன்னி

இன்று உங்களின் சொந்த முயற்சி மூலம் வளர்ச்சி காணப்படுகின்றது. வெற்றி நிச்சயம்.

பணியிடத்தில் பதவி உயர்வுக் கான வாய்ப்பு உள்ளது. உங்கள் கடின உழைப்பு பாராட்டைப் பெறும். உங்கள் பணியின் தரத்தை மேம்படுத்துவீர் கள்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை கொண்டிருப்பீர்கள். இதனால் உங்கள் அன்பு அதி கரிக்கும்.

நிதிநிலைமை சிறப்பாக காணப்படுகின்றது. இன்று பணத்தை சுதந்திரமாக கையாள்வீர்கள்.

இன்று உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக சிறந்த ஆரோக்கியம் காணப்படும்.

## துலாம்

இன்று சுறுசுறுப்பான மன நிலை யில் காணப்படுவீர்கள். மிகுந்த ஆற்ற லுடன் காணப்படுவீர்கள். சுய வளர்ச்சிப் பாதையில் செல்வீர்கள். உங்களிடம் மாற்றம் உணர்வீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

பணியில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள். இதற்கு உங்களிடம் காணப்படும் தன்னம்பிக்கையே காரணம்.

உங்கள் துணையுடன் சுமுகமாகப் பழகுவீர்கள். உங்கள் அனுசரனையான அணுகுமுறை அவரை மகிழ்விக்கும். உறவில் பிணைப்பு வலுப்படும்.

நிதிநிலைமை முன்னேற்றகரமாக காணப்படும். உங்கள் சேமிப்பை அதிகரிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் தைரியம் மற்றும் உறுதி காரணமாக நீங்கள் மிகவும் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.

## விருச்சிகம்

உங்களால் இன்று மகிழ்ச்சியை தக்க வைத்துக்கொள்ள முடியாது. வெளி யிடங்களுக்கு செல்வதன் மூலம் மன துக்கு ஆறுதல் கிடைக்கும்.

பணியில் வெற்றி காண மிகுந்த முயற்சி எடுக்க வேண்டும். எனவே சுமுகமாக பணிகள் நடைபெற திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் குறைந்த நேரத்தை செலவு செய்வீர்கள். உறவில் மகிழ்ச்சி நிலவ எந்த விஷயத் தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

இன்று வரவும் செலவும் இணைந்து காணப்படும். உங்கள் பணத்தை இன்று முறையாக பயன்படுத்த இயலாது.

இன்று ஆரோக்கியம் சுமாராக காணப்படும். சரியான நேரத்தில் உணவு உண்ண வேண்டும்.

# இன்றைய ராசி பலன்கள் - 23.07.2024

**தனுசு**

இன்று சிறிது சோம்பலுடன் காணப்படுவீர்கள். மனதில் குழப்பம் காணப்படும். இன்றைய நாளை உங்களுக்கு சாதகமாக்கிக் கொள்ள இத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நலம்.

இன்று முழுவதும் பணியில் முழுகியிருப்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்காது.

இன்று உங்கள் இருவரிடையே காணப்படும் மனக் குழப்பம் காரணமாக உங்கள் துணையுடன் சுமுகமான உறவு காணப்படாது. எனவே குழப்பத்தை தவிர்த்து தெளிவான எண்ணங்களை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

பணத்தை கவனமாகக் கையாள வேண்டும். அஜாக் கிரதை காரணமாக பணத்தை இழக்க நேரலாம்.

**கும்பம்**

இன்று சிறந்த அதிர்ஷ்டம் காணப் படும். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். உங்கள் அணுகுமுறை யில் வளைந்து கொடுக்கும் போக்கு காணப்படும்.

உங்கள் சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகளுடன் விருந்தில் கலந்து கொள்வீர்கள். அவர்களுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள்.

இன்று உங்கள் துணையிடம் காதல் உணர்வை வெளிப் படுத்துவீர்கள். இதனால் உங்கள் பிரியமானவரிடத்தில் அன்பு அதிகரிக்கும்.

இன்று பணவரவிற்கான வாய்ப்பு உள்ளது. பங்கு வர்த்தகத்தின் மூலம் பணம் சம்பாதிப்பீர்கள்.

இன்று அதிக ஆற்றலுடனும் உறுதியுடனும் காணப்படுவீர்கள். ஆரோக்கியம் சிறப்பாக இருக் கும்.

**மகரம்**

இன்று மகிழ்ச்சியான நாள். இன் றைய செயல்களின் விளைவுகள் உங்களுக்கு சாதகமாக அமையும். கடினமான பணிகளையும் இன்று எளி தாகச் செய்வீர்கள். உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்கான வாய்ப்பு உள்ளது.

மேலதிகாரிகளின் பாராட்டுகள் குவிந்து கொண்டே இருக்கும். பணிகளை குறித்த நேரத்துக்கு முன்பே தரமாக முடித்துத் தருவீர்கள்.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப் படுத்துவீர்கள்.இது நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்தும்.

எதிர்பாராத பண வரவுகள் காணப்படும். நீங்கள் ஆச்சரியப்படும் அளவில் உங்கள் வருமானம் அதி கரிக்கும். மகிழ்ச்சி நிலவும்.

உங்களிடம் காணப்படும் தைரியம் மற்றும் உறுதி காரணமாக இன்று முழு ஆரோக்கியத்துடன் திடமாக காணப்படுவீர்கள்.

**மீனம்**

உங்களின் சொந்த முயற்சி மூலம் இன்று நீங்கள் அபாரமான வளர்ச்சி காண்பீர்கள்.

பணியிடத்தில் பதவி உயர்வு கிடைக்க லாம். இன்று அர்ப்பணிப்புடன் பணி புரிவீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவு கொண்டிருப்பீர்கள். உங்கள் அணுகுமுறை மூலம் அவரின் இதயத்தில் இடம் பிடிப்பீர்கள்.

நிதி நிலைமையில் முன்னேற்றம் கானப்படும். வங்கி யிருப்பை நல்ல முறையில் பராமரிப்பீர்கள். திருப்தி நிலவும்.

சாதரணமான அணுகுமுறை மூலம் ஆற்றல் அதி கரிக்கும். அதன் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.



